DEPOSITION OF WITNESS
IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS,
(FAST TRACK COURT), KUMBAKONAM

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | | | : | **S.C : 323/2025** | |
| Prosecution Witness | | | : | **PW - 2** | |
| Name | : | திரு. சுப்ரமணியன் | Occupation | : | சிறப்பு உதவி ஆய்வாளர் |
| Father's Name/ Husband | : | கோவிந்தராஜ் | | | |
| Village | : | கீழஅமராவதி | Age | : | 59 |
| Taluk | : | வலங்கைமான் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 10th day of July 2026.
10-07-2026

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**ஆரம்பிக்கப்பட்ட நேரம் : 03.36**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருநீலக்குடி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். 16/01/2025 ஆம் தேதி நாச்சியார்கோவில் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றிய போது, 13.00 மணிக்கு நான் மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர் கண்ணன், ஆய்வாளர் ராஜேஷ் மற்றும் போலிஸ் ஜீப் டிரைவரான காவலர் ஒருவரும் சேர்ந்து குற்ற தடுப்பு நடவடிக்கையை கண்காணிக்க ரோந்து அலுவலாக முறுக்கங்குடி சென்ற போது, முறுக்கங்குடி கடை வீதியில் போக்குவரத்துக்கு இடைஞ்சலாகவும் போக்குவரத்து ஸ்தம்பித்தும் பொதுமக்கள் அலறியடித்தும் ஓடிக்கொண்டிருந்தார்கள். நாங்கள் சென்று பார்த்த போது, பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த பப்லு என்று பிரசாத் த/பெ பாஸ்கர், மாரியம்மன் கோயில் தெரு, முறுக்கங்குடி என்பவர் கையில் பெரிய அரிவாளை வைத்து சுழற்றிக்கொண்டு, இருபக்கமும் ஓடி கெட்ட வார்த்தைகளால் திட்டிக்கொண்டு, ரோட்டில் அரிவாளை தீட்டி தீப்பொறி வரவழைத்துக்கொண்டிருந்தவரை பார்த்து பொது மக்களும் குழந்தைகளும் பார்த்து அலறியடித்து

ஓடிக்கொண்டிருந்தார்கள். அங்கிருந்த கடைகாரர்கள் கடையை முடிக்கொண்டிருந்தார்கள். அங்கு பக்கத்தில் இருந்தவர்கள் தடுக்க முயற்சித்த போது, அவர்களை பார்த்து கிட்டே வந்தாள் கொலை செய்துவிடுவேன் என்று மிரட்டிக்கொண்டிருந்தார் . அங்கு நாங்கள் சென்றதை பார்த்து எதிரி பப்லு என்ற பிரசாத் தப்பிக்க முயற்சி செய்தவரை ஆய்வாளரும் நானும் அ .சா.1ம் சேர்ந்து சுற்றி வளைத்து பிடித்தோம். எதிரியை ஆய்வாளர் கைது செய்து , எதிரி தானா முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை ஆய்வாளர் பதிவு செய்தார் . சாட்சிகளான எனது முன்னிலையிலும் அ .சா.1 இன் முன்னிலையிலும் பதிவு செய்து , அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் , அ.சா.1ம், எதிரியிடமும் கையொப்பம் பெற்றார் . ஆய்வாளரும் அதில் கையொப்பம் செய்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் இரண்டாவது காட்டப்படும் கையொப்பம் என்னுடையது தான் . எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அவர் கையில் வைத்திருந்த அரிவாளை எங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து சா.பொ.1யை கைப்பற்றினார் . அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும் , அ.சா.1 கண்ணனும் ஆய்வாளரும் கையொப்பம் செய்தோம் . அந்த கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவதாக உள்ள கையொப்பம் என்னுடையது தான். பின்னர் 15.30 மணிக்கு எதிரி மற்றும் தடயத்துடன் நிலையம் வந்து நிலைய குற்ற எண் 29/2025 ச/பி 296(பி) பிஎன்எஸ் 25(1A) Arms Act இன் கீழ் ஆய்வாளர் வழக்கு பதிவு செய்ய நாங்கள் அவருக்கு உதவியாக இருந்தோம். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பிலான குறுக்கு விசாரணை**.

ஒப்புதல் வாக்குமூலத்தை கணினியில் தட்டச்சு செய்தது யார் என்றால் ஆய்வாளர் தான் தட்டச்சு செய்தார் . அதை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன் . முதல் தகவல் அறிக்கை முதலில் பதிவு

செய்யப்பட்டதா அல்லது ஒப்புதல் வாக்குமூலம் முதலில் பதிவு செய்யப்பட்டதா என்றால் ஒப்புதல் வாக்குமூலமே முதலில் பதிவு செய்யப்பட்டது. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் கையெழுத்து என்னுடையது தான் என்றால் சரிதான் . நான் கையொப்பமிட்ட முதல் தகவல் அறிக்கைக்கு முன்னதாக தயார் செய்யப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்திலேயே முதல் தகவல் அறிக்கை முன்னதாவே அதன் குற்ற எண் 29/2025 ச/பி 296(பி) பிஎன்எஸ் உ/இ 25(1A) Arms Act இன் என்று முதல் தகவல் அறிக்கையின் குற்ற எண் குறித்து காணப்படுகிறது என்றால் சரிதான் . ஒப்புதல் வாக்குமூலமானது காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை தயார் செய்த பின்னரே அதனடிப்படையில் காவல் நிலையத்தில் தயார் செய்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் அ.சா.1 ம் கையொப்பம் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. பாதி கணினி தட்டச்சு செய்யப்பட்டும் பாதி கையால் எழுதப்பட்டும் காணப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையால் எழுதப்பட்ட எழுத்துக்கள் யார் எழுதியது என்றால் ஆய்வாளரால் எழுதப்பட்டது. எனக்கு தெரிந்து சம்பவம் இடமாக கூறப்பட்ட அந்தயிடத்தில் உள்ள தனி நபரோ , கடை உரிமையாளர்களோ பாதிசாரிகளோ உள்ளிட்ட எவரும் தனிப்பட்ட சாட்சிகளாக ஆய்வாளரால் விசாரிக்கப்படவில்லை என்றால் அது குறித்து ஆய்வாளரை தான் கேட்கவேண்டும். தனிநபர் எவரும் புகார் கொடுத்தார்களா இல்லையா என்ற விவரம் எனக்கு எதுவும் தெரியாது என்றால் புகார் கொடுக்க தனிநபர்கள் பயந்து சென்றுவிட்டார்கள். அவ்வாறு சாட்சி சொல்ல பயந்த பொது மக்களில் எவரது பெயரையாவது என்னால் சொல்ல முடியுமா என்றால் ஞாபகமில்லை . சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் பகுதி கடைகள் நிறைந்த பகுதி என்பதால் அங்கிருந்த கடைகளின் உரிமையாளர்கள் குறித்து கூட என்னால் எதுவும் தகவல் சொல்ல

முடியாது என்றால் சரிதான். அன்றைய தேதியில் நிலைய பாரா அதிகாரி, நிலைய பொறுப்பு அதிகாரி யார் இருந்தார்கள் என்பது குறித்து என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் ஞாபகமில்லை . நாங்கள் காவல் நிலையத்தில் புறப்பட்டு நேரடியாக சம்பவம் நடந்த இடத்திற்கு தான் சென்றோமா என்றால் ரோந்து சென்றுக் கொண்டிருந்த போது அந்தயிடத்திற்கு சென்றோம் . முறுக்கங்குடி பகுதிக்கு செல்வதற்கு முன்பு இறுதியாக எங்கே சென்றோம் என்றால் அய்யாவடி என்ற பகுதிக்கு சென்றோம் . அய்யாவடி என்பது வேறு ஊர் என்றும் , வில்லியவரம்பல் என்பது வேறு ஊர் என்றால் சரிதான் . இந்த வழக்கில் எதிரிக்கு எதிராக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது எங்களது காவல் ஆய்வாளர் ராஜேஷ் தான் என்றால் சரிதான் . பொதுவாக ஜனவரி 14, 15, 16 ஆகிய தேதிகளில் தான் ஒவ்வொரு ஆண்டும் பொங்கல் வருவது வழக்கம் என்றால் சரிதான் . இந்த வழக்கு எதிரிக்கு எதிராக பொங்கல் பண்டிகை காலக்கட்டத்தில் தான் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கின் தடயப்பொருளான சா.பொ.1 யை காவல் நிலையத்தில் இருந்த அந்த தடயப்பொருளை எதிரிக்கு எதிராக ஆய்வாளர் சேர்த்து , இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல . சா.பொ.1 ஆனது பழைய நிலையில் துருபிடித்து காணப்படுகிறது என்றால் சரிதான். சா.பொ.1 க்கும் எதிரிக்கும் இடையே எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல . நான் சொல்வது போல் நான் சொன்ன நாள், நேரத்தில் ஆய்வாளர் மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர் அ .சா.1 கண்ணன் ஆகியோருடன் ரோந்து பணிக்கு செல்லவில்லை என்றாலும், என் மேல் அதிகாரி ஆய்வாளர் எதிரிக்கு எதிராக ஒரு புள்ளி விவர கணக்கிற்காக போடப்பட்ட பொய் வழக்கை அனுசரித்து பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் கையொப்பம் செய்ததாக குறிப்பிடும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும்

கைப்பற்றுதல் மகஜர் ஆகிய ஆவணங்கள் எங்கள் காவல் நிலையத்தில் வைத்து வேறு காவலர் தயார் செய்ததில் நான் பின்னிட்டு கையொப்பம் செய்துவிட்டு, தற்போது உண்மைக்கு புறம்பாக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல . நான் சொல்வது போல் சொன்ன நாள் நேரத்தில் இந்த வழக்கின் எதிரி அங்கு இல்லை என்றாலும் எதிரியை அங்கு பார்க்கவில்லை என்றாலும் ஆய்வாளர் இந்த எதிரியை நான்சொன்ன இடத்தில் கைது செய்யவில்லை என்றாலும் வழக்கை அனுசரித்து நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. என்னை இந்த வழக்கு சம்மந்தமாக தனிப்பட்ட முறையில் ஆய்வாளர் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. விசாரித்தார்.

**முடிக்கப்பட்ட நேரம்: 04.13**

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS,
(FAST TRACK COURT), KUMBAKONAM

<table>
<tr><td colspan="3">Case No</td><td>:</td><td colspan="3">S.C : 323/2025</td></tr>
<tr><td colspan="3">Prosecution Witness</td><td>:</td><td colspan="3">PW - 1</td></tr>
<tr><td>Name</td><td>:</td><td>திரு.A.T. கண்ணன்</td><td rowspan="2" colspan="2">Occupation</td><td rowspan="2">:</td><td rowspan="2">சிறப்பு உதவி ஆய்வாளர்</td></tr>
<tr><td>Father's Name/ Husband</td><td>:</td><td>திருவேங்கடசாமி</td></tr>
<tr><td>Village</td><td>:</td><td>மேலஅம்மாசத்திரம்</td><td rowspan="2" colspan="2">Age</td><td rowspan="2">:</td><td rowspan="2">59</td></tr>
<tr><td>Taluk</td><td>:</td><td>கும்பகோணம்</td></tr>
</table>

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 10th day of July 2026.
10-07-2026

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**ஆரம்பிக்கப்பட்ட நேரம் : 01.03**

**முதல் விசாரணை**

நான் தற்போது தஞ்சாவூர் கிழக்கு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 16/01/2025 ஆம் தேதி நாச்சியார்கோயில் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றிய போது, சுமார் மதியம் 1 மணிக்கு ரோந்திற்காக ஆய்வாளர் திரு .ராஜேஷ், என்னையும் சிறப்பு உதவி ஆய்வாளர் சுப்ரமணியன் ஆகியோருடன் ஒரு காவலர் எங்கள் அலுவலக ஜீப்பை ஓட்ட முருக்கங்குடி பக்கமாக ரோந்து சென்றபோது, முருக்கங்குடி கடை தெருவில் வண்டிகள் நின்றுக்கொண்டிருந்தன , மக்கள் அலறியடித்து ஓடி வந்தார்கள். மதியம் 1.15 மணியளவில் கடை தெருவில் பார்த்த போது, பின்னர் ஆய்வாளர் பெயர் கேட்டு தெரிந்த ஆஜர் எதிரியான மாரியம்மன் கோயில் தெரு, பப்லு என்ற பிரசாத் த /பெ பாஸ்கர் என்பவர் கையில் அரிவாளுடன் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடிய பெரிய அரிவாளை வைத்துக்கொண்டு தலைக்கு மேல் சுற்றிக்கொண்டு அங்கும் இங்குமாக ஓடிக்கொண்டு, அசிங்கமான வார்த்தைகளை பேசிக்கொண்டு அந்த அரிவாளை ரோட்டில் தீட்டி நெருப்பு பொறியை உருவாக்கி , அதை

பார்த்த பொது மக்களும் குழந்தைகளும் அலறியடித்து ஓடினார்கள் . கடைதெருவில் கடை உரிமையாளர்கள் கடையை சாத்திக்கொண்டு புறப்பட முற்பட்ட போது, ஆய்வாளர் எதிரி கைது செய்த போது அவருக்கு நானும் சிறப்பு உதவி ஆய்வாளர் சுப்ரமணியனும் உதவியாக இருந்தோம் . பின்னர் ஆய்வாளரிடம் எதிரி தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பகல் 1.30 மணிக்கு பொது மக்கள் யாரும் முன்வராத காரணத்தினால் எங்கள் இருவரையும் சாட்சியாக வைத்து எங்கள் முன்னிலையில் ஆய்வாளர் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றார் . அதில் நானும், சிறப்பு உதவி ஆய்வாளர் சுப்ரமணியன் மற்றும் எதிரியும் கையொப்பம் செய்தோம். அதில் ஆய்வாளரும் கையொப்பம் செய்தார் . அந்த ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையது தான் . அந்த ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.1.** அந்த ஒப்புதல் வாக்குமுலத்திலுள்ள அனுமதிக்கப்பட்ட பகுதியின் பேரில் எதிரியிடமிருந்து ஆய்வாளர் மேற்படி அரிவாளை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார் . பின்னர் 02.45 மணிக்கு எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட பெரிய அரிவாளை கைப்பற்றுதல் மகஜரில் ஆய்வாளர் கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ–2.** அதில் நானும் , சிறப்பு உதவி ஆய்வாளர் சுப்ரமணியனும் சாட்சி கையொப்பம் செய்தோம் . என்னிடம் காட்டப்படும் அரிவாள் தான் அன்று எதிரி கையில் வைத்திருந்தது . அந்த பெரிய அரிவாள் **சா.பொ.1.** பின்னர் சம்பவயிடத்தில் இருந்து எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட பெரிய அரிவாள், எதிரியுடன் மாலை 3.30 மணிக்கு காவல் நிலையம் அனைவரும் வந்து , ஆய்வாளர் வழக்கு பதிவு செய்ய ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். குற்ற எண் 29/2025, ச/பி 296(பி) பி.என்எஸ் 25(1A) Arms Act இன் கீழ் ஆய்வாளர் வழக்கு பதிவு

செய்தார். வழக்கு பதிவு செய்ய ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பிலான குறுக்கு விசாரணை.**

காவல் நிலையத்தில் இருந்து ரோந்து பணிக்கு எத்தனை மணிக்கு எங்கள் குழுவினர் சென்றோம் என்றால் மதியம் 1 மணிக்கு மேல் தான் சென்றோம். காவல் நிலையத்தில் இருந்து நேரடியாக சம்பவயிடம் சென்றோமா அல்லது வேறு இடங்களில் கண்காணித்துவிட்டு அதன்பின்னர் சம்பவயிடத்திற்கு சென்று பார்த்தோமா என்றால் நேரடியாக சம்பவயிடத்திற்கு சென்றோம். வில்லியவரம்பல் என்ற கிராமத்திற்கும் முறுக்கங்குடி கிராமத்திற்கும் இடையே எவ்வளவு தூரம் என்றால் சுமார் 2 கிமீ இருக்கும். வில்லியவரம்பல் கிராமத்திற்கு சென்றபோது நேரம் என்ன என்றால் நான் கவனிக்கவில்லை. ரோந்து சென்ற நாளின் கிழமை என்ன கிழமை என்றால் ஞாபகமில்லை. தேதி தான் ஞாபகமுள்ளது. பொதுவாக இந்துக்களின் பொங்கல் பண்டிகையானது ஒவ்வொரு வருடமும் ஜனவரி 14 அல்லது ஜனவரி 15 தேதிகளில் தான் வரும் என்றால் சரிதான். எதிரிக்கு எதிராக இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டது பொங்கல் பண்டிகை காலக்கட்டத்தில் தான் என்றால் சரிதான். ரோந்துக்கு சென்ற டிரைவருடன் சேர்த்து அனைத்து காவலர்களும் யூனிபார்மில் தான் இருந்தோம் என்றால் ஆமாம். ஆய்வாளர் வாகனத்தை ஓட்டுவதற்காக காவல் நிலையத்தில் ஓட்டுநரும் காவலராக தான் இருப்பார் என்றால் சரிதான். அன்றைய தேதியில் நாங்கள் சென்ற வாகனத்தில் ஓட்டுநராக எந்த காவலர் இருந்தார் என்றால் ஞாபகமில்லை. அன்று ரோந்து சென்றவர்கள் ஓட்டுநருடன் சேர்த்து மொத்தம் 4 பேர் தான் சென்றோம் என்றால் சரிதான். நான் ஆய்வாளரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் அன்று ரோந்தின் போது எங்களுடன் வந்த ஓட்டுநர் யார் என்ற விவரம் குறித்து நான் கூறவில்லை என்றால் சரிதான். சம்பவம்

நடந்ததாக நான் கூறும் இடமானது போக்குவரத்து நெரிசல் அதிகம் உள்ள பகுதி, பொது மக்கள் அதிகம் கூடும் பகுதி , நிரந்தர கடைகள் உள்ள பகுதி தான் என்றால் சரிதான் . அங்கு சம்பவம் நடந்ததாக சொல்லும் தினத்தில் நிரந்தர கடைகாரர்கள் அல்லது பணி செய்பவர்கள் அல்லது அங்கிருந்த பொது மக்கள் யாரையாவது நாங்கள் தனிநபர் சாட்சியாக ஏதும் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான் . எதிரி செய்ததாக கூறும் சம்பவ நடவடிக்கை குறித்து அந்த பகுதியில் உள்ள பொது மக்களோ தனி நபரோ கடைகள் வைத்திருந்தவர்களோ எவரும் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான் . நான் எத்தனை ஆண்டுகளாக நாச்சியார்கோவில் காவல் நிலையத்தில் சம்பவத்திற்கு முன்பாக பணியில் இருந்தேன் என்றால் சம்பவத்திற்கு முன்பு 2 ஆண்டு காலமும், சம்பவம் நடந்து ஒரு வரும் கழித்து நான் மாறுதலாகி சென்றுவிட்டேன். நான் சம்பவத்திற்கு முன்பு நான் 2 ஆண்டுகள் நாச்சியார்கோவில் காவல் நிலையத்தில் இருந்ததால் எங்கள் காவல் நிலைய எல்லைக்குள் வரும் பகுதிகள் அனைத்தையும் குறித்து எனக்கு நன்கு தெரிந்திருக்க வாய்ப்புள்ளது என்றால் ஓரளவு தெரியும் . சம்பவம் நடந்ததாக சொல்லும் நாள் அன்று காவல் நிலைய பொறுப்பு அதிகாரி யார் என்றால் ஞாபகமில்லை. பாராவில் இருந்த காவலர் யார் என்றால் அதுவும் ஞாபகமில்லை. நான் காவல் நிலைய பொறுப்பு அதிகாரியாக அங்கு இருந்த காலக்கட்டத்தில் நான் பணியாற்றினேனா என்றால் ஆமாம் . எனது முதல் விசாரணையில் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகில் இருந்த கடையின் உரிமையாளர்கள் , கடையை சாத்திக்கொண்டு புறப்பட்ட முற்பட்டதாக நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள நிலையில், அந்த கடையின் உரிமையாளர்கள் எவரையும் நாங்கள் சாட்சியாக இருக்க சொல்லி வலியுறுத்தவில்லையா என்றால் கேட்கவில்லை. அதுபோன்ற கடையை மூடிக்கொண்டிருந்த

உரிமையாளர்களின் பெயர் குறித்தும் என்னால் சொல்ல முடியாது என்றால் சரிதான் . நான் ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சியாக கையொப்பம் போட்டதாக சொல்வது எத்தனை மணிக்கு என்றால் நேரம் குறித்து எனக்கு ஞாபகமில்லை . கையால் எழுதப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தில் தான் நான் சாட்சி கையொப்பம் செய்தேனா என்றால் கணினியில் தட்டச்செய்யப்பட்டு பிரிண்ட் எடுத்து தயார் செய்யப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தில் தான் நான் கையொப்பம் செய்தேன் . அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை கணினியால் தட்டச்சு செய்தவர் யார் என்றால் அது குறித்து எனக்கு தெரியவில்லை . ஒப்புதல் வாக்குமூலம் வாங்கியதில் இருந்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது வரை எவ்வளவு நேரம் ஆய்வாளரால் எடுத்துக் கொள்ளப்பட்டது என்றால் அது குறித்து எனக்கு தெரியவில்லை. எனது இடது கையில் இந்த வழக்கு குறிப்புகளை எழுதி வந்துள்ளேன் என்றால் சரியல்ல . நான் கையை பார்த்தோ, பேப்பரை பார்த்தோ நான் சாட்சியமளிக்கவில்லை . உண்மையில் நான் கையில் குறிப்பு எழுதி வைத்து தான் சாட்சியமளிக்கிறேன் என்றும் இந்த வழக்கிற்காக நான் இல்லை என்று தவறாக சாட்சியமளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல . ஒப்புதல் வாக்குமூலம் எதிரியிடம் வாங்கப்பட்ட பின்பு தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதா என்றால் சரிதான் . முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு முன்பாகவே நான் கையொப்பம் செய்ததாக சொல்லக்கூடிய ஒப்புதல் வாக்குமூலத்தில் இந்த வழக்கின் குற்ற எண் மற்றும் சட்டப்பிரிவுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்றால் ஒப்புதல் வாக்குமூலத்தில் குற்ற எண் 29/2025 என்றும், சட்டப்பிரிவுகள் 296(பி) பிஎன்எஸ் 25(1A) Arms Act என்று பதிவு செய்யப்பட்டு காணப்படுகிறது . கைப்பற்றுதல் மகஜரில் ஒரே பக்கத்தில் பாதி பக்கம் கணினியாக்கம் தட்டச்சு செய்யப்பட்டும் , மீதி பக்கம் கையால் எழுதப்பட்டும்

காணப்படுகிறது என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகஜரில் காணப்படும் கையால் எழுதப்பட்ட எழுத்து யாரால் எழுதப்பட்டது என்றால் அது குறித்து எனக்கு தெரியவில்லை. ஒப்புதல் வாக்குமூலம் கைப்பற்றுதல் மகஜர் ஆகிய இரண்டுமே காவல் நிலையத்தில் வைத்து வேறு காலர்களால் தயார் செய்யப்பட்டு என்னிடம் கையொப்பம் மட்டுமே பெறப்பட்டதாலேயே ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் ஆகிய ஆவணங்கள் யாரால் எழுதப்பட்டது என்ற சங்கதி குறித்து எனக்கு தெரியவில்லை என்று சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு தெரிந்து ஆய்வாளர் சம்பவம் நடந்ததாக கூறும் இடத்தில் வேறெந்த தனிப்பட்ட சாட்சிகள் எவரையும் விசாரிக்கவில்லையா என்றால் அது குறித்து எனக்கு தெரியவில்லை. சா.பொ.1 யை எதிரி எங்கிருந்து எடுத்து வந்தார் என்பது குறித்து எனக்கு எதுவும் நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எதிரிக்கும் இந்த சா.பொ.1 க்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றும், மேற்படி சா.பொ.1 உடன் ஆஜர் எதிரியை சொன்ன நேரத்தில், சொன்ன நாளில் சொன்ன இடத்தில் பார்க்கவேயில்லை என்றும் சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு தமிழர் திருநாள் பண்டிகையை ஒட்டி ஒரு புள்ளிவிவர கணக்கிற்காக, எங்களது ஆய்வாளரால் ஒரு பொய்யான வழக்கை பதிவு செய்துள்ளார் என்றும், நான் காவல் நிலையத்தில் ஆய்வாளரான எனது உயர் அதிகாரிக்கு கீழ் பணிபுரிந்ததால், அவரால் தாக்கல் செய்த பொய்யான வழக்கிற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் ஆய்வாளர் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லையா என்றால் இல்லை. என்னை விசாரித்தார். என்னை ஆய்வாளர் விசாரணை செய்த போது கூட காவல் நிலையத்தில் இருந்து மடிக்கணினி, மற்றும் அச்சடிக்கப்பட்ட ஒரு பகுதி கையால் எழுதப்பட்டு மற்றொரு கணினியால் தட்டச்சு செய்யப்பட்ட ஆவணங்களை எங்களுடன் எடுத்து சென்றதாக எதுவும் நான் எனது

விசாரணையின் போது சொல்லவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எடுத்து சென்றோம் . இந்த வழக்கின் சா .பொ.1 யை என்னுடைய மேல் அதிகாரியான காவல் ஆய்வாளர் இந்த எதிரிக்கு எதிராக சேர்த்துள்ளதை அனுசரித்து பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள், நேரத்தில் சொன்ன இடத்திற்கு ரோந்து பணிக்கே செல்லவில்லை என்றும் அந்த காரணத்தினால் தான் எனக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியில் யார் காவல் நிலையத்தில் பொறுப்பில் இருந்த அதிகாரி, யார் காவல் நிலைய பாராவில் இருந்தார்கள் என்பது கூட எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல . நான் முதல் விசாரணையில் கூறிய அனைத்து விவரங்களும் இந்த வழக்கிற்காக எதிரிக்கு எதிராக பொய்யாக சாட்சியமளித்துள்ளதால் எனது சாட்சியம் ஏற்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

**முடிக்கப்பட்ட நேரம்: 03.34**

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.